செ.வெ.எண் : 04/ஜூன் நாள் : 03.06.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## இந்து சமய அறநிலையத்துறையின் சார்பாக நடைபெற்ற அரசு விழாவில்

## சிறு சிறு திருக்கோயில்களுக்கான பூஜை உபகரணங்கள் உட்பட பல்வேறு அரசு திட்டங்களின் கீழ் ரூ.19.06 இலட்சம் மதிப்பில் 176 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள்

## மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள் வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (03.06.2017) இந்து சமய அறநிலையத்துறையின் சார்பாக நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள், சிறு சிறு திருக்கோயில்களுக்கான பூஜை உபகரணங்கள் உட்பட பல்வேறு அரசு திட்டங்களின் கீழ் ரூ.19.06 இலட்சம் மதிப்பில் 176 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் விழாவிற்கு தலைமை வகித்தார்.

பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சாதி, சமய பாகுபாடின்றி அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அவரவர் சமயம் சார்ந்த உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் விதமாக பல்வேறு அரசு நலத்திட்டங்களை செயல்படுத்தினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியினை பின்பற்றி செயல்படும் தமிழ்நாடு அரசு தொடர்ந்து அனைத்து நலத்திட்டங்களையும் சிறப்பாக செயல்படுத்தி வருகின்றது.

குறிப்பாக இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்துவர்கள் என அனைத்து சமயம் சார்ந்த பொதுமக்களுக்கு அவரவர் புனிதத் தலங்களாக விளங்குகின்ற கேதர்நாத், மக்கா, ஜெருசலம் ஆகிய புனித தலங்களுக்கு புனித யாத்திரை செல்வதற்கான உதவித்தொகை வழங்கும் திட்டம், இஸ்லாமியர்கள் பண்டிகையான ரமலான் பண்டிகையின்போது தமிழகத்தில் உள்ள அனைத்து மசூதிகளிலும் ரமலான் நோன்புக்கஞ்சி தயாரிப்பதற்காக 4,000 மெ.டன் அளவிலான அரிசி வழங்கும் திட்டம் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் உளமாக்களுக்கு வழங்கப்பட்டு வந்த உதவித்தொகையினை ரூ.1000/- லிருந்து ரூ.1,500/-ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகின்றது.

இதுதவிர, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்து சமயம் அறநிலையத்துறையின் கீழ் உள்ள சிறு,சிறு திருக்கோயில்களுக்கான பூஜை உபகரணங்கள் வழங்கும் திட்டத்தினை அறிவித்தார்கள். அதன்படி இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் கீழ் மொத்தம் 445 திருக்கோயில்கள் உள்ளன. அவற்றில் நிதி வசதியற்ற 316 திருக்கோயில்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இன்றைய தினம் நடைபெறும் விழாவில் 150 திருக்கோயில்களுக்கு தலா ரூ.2,500/- மதிப்பில் மொத்தம் ரூ.3.75 இலட்சம் பூஜை உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. அவற்றில் பித்தளை தாம்பாளம், தூபக்கால், மணி, தொங்கு விளக்கு மற்றும் கார்த்திகை விளக்கு ஆகிய 5 உபகரணங்கள் உள்ளடக்கமாகும்.

மேலும், இராமநாதபுரம் மாவட்ட பகுதிகளில் உள்ள மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் விதமாக தமிழ்நாடு அரசு இராமநாதபுரத்தில் புதிய அரசு சட்டக் கல்லூரி அமைக்கப்படும் என அறிவித்துள்ளது. அதனடிப்படையில் அதற்கான அனைத்துப் பணிகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நடப்பு கல்வியாண்டில் புதிதாக துவங்கப்பட உள்ள அரசு சட்டக் கல்லூரியில் மூன்று வருட பாடப்பிரிவில் 80 மாணாக்கர்களுக்கும், 5 வருட பாடப்பிரிவில் 80 மாணாக்கர்களுக்கும் ஆக மொத்தம் 160 கல்வி இடங்களுக்கு மாணாக்கர்கள் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. மாணவ, மாணவியர்கள் இந்த வாய்ப்பினை முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இதுதவிர, இராமநாதபுரத்தில் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் வானூர்தி நிலையம் (Airport) அமைத்திடவும் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

அதனைத்தொடர்ந்து மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் அவர்கள், இராமநாதபுரம் சீதக்காதி சேதுபதி விளையாட்டு அரங்கில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் இராமநாதபுரம் டென்னிஸ் கிளப் ஒருங்கிணைந்து ரூ.7 இலட்சம் மதிப்பில் புதிதாக அமைந்துள்ள செயற்கை இதழ் டென்னிஸ் விளையாட்டு அரங்கினை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சி.முத்துமாரி, சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துறை ஆட்சியர் திரு. பாலசுப்பிரமணியம், இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் திரு.ராமசாமி, இராம்கோ கூட்டுறவு தலைவர் திரு.செ.முருகேசன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.கோ.அண்ணாதுரை, மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் திரு.வி.ஜெயராமன், இந்து சமய அறநிலையத்துறை ஆய்வாளர் திரு.எம்.முருகானந்தம் உட்பட அரசு அலுவலர்கள், பயனாளிகள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**